# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர்ஆண்டு 2029 ஐப்பசி 29 ஞாயிற்றுக்கிழமை (15-11-1998) UTHAYAN- A Lively National Tamil Daily கதிர்: 301


# அமைச்சர் கதிர்காமர் நேற்று தென் ஆபிரிக்கா பயணம்!

## புலிகளை கட்டுப்படுத்துமாறு நேரடியாகக் கோருவார்

கொழும்பு, நவம்பர் 15

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று திடீரென தென் ஆபிரிக்கா பயணமானார். தென் ஆபிரிக்காவில் அதிகரித்துவரும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துமாறு அவர் தென் ஆபிரிக்கத் தலைவர்களை நேரடியாகக் கோருவார் என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தென் ஆபிரிக்காவில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சு பத்துக்கு மேற்பட்ட தடவைகள் தென் ஆபிரிக்க அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தது.

இந்த வேண்டுகோள்களை அடுத்து விடுதலைப் புலிகளின் நடமாட்டம் குறித்தும் — புலிகளுக்கு ஆதரவு அளிக்கும் அமைப்புகள் குறித்தும் —விசாரணை நடத்தப்படும் என்று தென் ஆபிரிக்க வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மார்கோ போனி சமீபத்தில் தெரிவித்திருந்தார்.

எனினும் இலங்கை அரசு எதிர்பார்த்த அளவு காரியங்கள் நடைபெறாததை அடுத்தே லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று தென் ஆபிரிக்கா புறப்பட்டுச் சென்றதாக நம்பப்படுகின்றது.

தென் ஆபிரிக்காவில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரிப்பு, தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா இலங்கை இனப் பிரச்சினையில் மத்தியஸ்தம் வகிக்க முயற்சி போன்ற தகவல்கள் குறித்து இலங்கை அரசு கவலை கொண்டிருப்பதாகவும் தகவல்கள் தெரி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கொக்காவிலில் இருவர் கிபிர் தாக்குதலில் பலி!

### மற்றும் ஒருவர் காயம்

வவுனியா, நவ. 15

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் கிபிர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார் என்று வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுக் காலை 9-30 மணியளவில் கொக்காவில் புத்துவெட்டுவான் பகுதியில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தாக்குதலில் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பழை புனர்வாழ்வு முகாமுக்கு மனித உரிமை ஆணைக்குழு விஜயம்

### அங்குள்ள கைதிகளைப் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், நவ 15

தெல்லிப்பழையிலுள்ள புனர்வாழ்வு முகாமுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர்கள் நேற்று விஜயம் செய்து அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள 18 கைதிகளைப் பார்வையிட்டனர்.

பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்தக் கைதிகள் அண்மையில்தான் தெல்லிப்பழை புனர்வாழ்வு முகாமுக்கு மாற்றப்பட்டனர்,

இந்தக் கைதிகளுக்கு மரவேலை, தையல், விவசாயம் உட்பட பல தொழிற் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன என்று அந்த முகாமுக்குப் பொறுப்பான அதிகாரி தெரிவித்ததாக மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி எஸ். சிறீதரன் தெரிவித்தார்.

தெல்லிப்பழை புனர்வாழ்வு முகாமிலுள்ள கைதிகளின் விவரம் வருமாறு:-

★ அன்ரனிதாஸ் ஜென் போமன்ஸ் (வயது24) இல.4, தண்ணீர் தாங்கி வீதி, குருநகர்.

( 10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை அகதி முகாமில் உண்ணாவிரதம் நிறுத்தம்

திருகோணமலை, நவ.15

யாழ்ப்பாணம் செல்வதற்கு கப்பல் வசதி செய்து தருமாறு கோரி திருகோணமலைக் கண்ணாடித் தொழிற்சாலை முகாமில் நடத்தப்பட்டு வந்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது.

ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா நேற்று உண்ணாவிரதிகளுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அடுத்த வெள்ளிக்கிழமைக்குள் கப்பல் வசதி செய்து தரப்படும் எனவும் —

ஜனாதிபதியுடன் நடந்த சந்திப்பின் போது கப்பல் சேவை குறித்துத் தீர்க்கமான முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்ததை அடுத்தே உண்ணாவிரதம் கைவிடப்பட்டதாக உண்ணாவிரதிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று உண்ணாவிரதிகளைச் சந்தித்த ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள் அடுத்த வார இறுதிக்குள் கப்பல் சேவை நடத்தப்படாவிட்டால் உண்ணாவிரதிகள் எடுக்கும் எந்த ஒரு நடவ

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஏழாலையில் ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 15

கடந்த வியாழக்கிழமை பொதுமகன் ஒருவர்கொடுத்த தகவலை அடுத்து ஏழாலை மேற்கில் ஆயுதங்கள் மற்றும் கண்ணிகள் கைப்பற்றப்பட்டதாக பலாலி இராணுவ தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## நாரந்தனை வாசி ரயிலுக்கு பலி

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி வந்துகொண்டிருந்த ரயிலில் அகப்பட்டு நாரந்தனை வாசி ஒருவர் உயிரிழந்தார்

நேற்று முன்தினம் அதிகாலையில் இந்த ரயில் வவுனியா 156 ஆம் கட்டைக்கும் 157 ஆம் கட்டைக்கும் இடையில் வந்துகொண்டிருந்த சமயமே இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

இந்த விபத்தில் ஊர்காவற்றுறை நாரந்தனை வாசியான சூசை பீற்றர் (வயது 45) என்பவரே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.



ஊருக்குள்ளே தீர்க்க வேண்டிய பிரச்சினைக்கு உலகமெல்லாம் சுற்றுகிறார் பாருங்கோ ... !

## மாங்குளத்துக்கு வடக்கே படையினர் மீது தாக்குதல்

கொழும்பு, நவ. 15

மாங்குளத்துக்கு வடக்குப்பகுதியில் பாதுகாப்பு நிலைகளில் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தினார்கள் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத்தலைமைச்செயலகம் அறிவித்துள்ளது

விடுதலைப் புலிகளின் தாக்குதலை படையினர் மோட்டார் மற்றும் சிறியரக பீரங்கிகளைக்கொண்டு முறியடித்தார்கள் என்றும்—

படையினர் தாம் கைப்பற்றிய பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தி வருகின்றனர் என்றும்—தலைமைச்செயலகம் மேலும் தெரிவித்தது. (இ-9)

## புதிய ஆளுநருக்கு புளொட் வாழ்த்து

கொழும்பு, நவ. 15

வடக்கு - கிழக்கு ஆளுநராக மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா பதவி ஏற்றதை வாழ்த்தி புளொட் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

''புதிய ஆளுநர் நியமனம் தொடர்பாக புளொட்டின் நிலைப்பாடும் வாழ்த்தும்'' என்ற தலைப்பில் புளொட் உப தலைவர் என். மாணிக்கதாசன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு—கிழக்கு மாகாண சபையின் புதிய ஆளுநராக பதவியேற்ற முன்னாள் இராணுவ அதிகாரி அசோகா ஜெயவர்த்தனாவின் பதவி ஏற்பு சம்பந்தமாக வடக்கு—கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தங்களது அதிருப்தியையும், கண்டனத்தையும் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இது விடயத்தில் எமது நிலைப்பாடானது காலத்தின் தேவையை ஒட்டியதாக — எமது வடக்கு—கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களின் யதார்த்தத்தை ஒட்டியதாக — இருக்கவேண்டும் என்று கருதுகின்றோம்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதியுடன் சந்திப்பில்

## செம்மணி குறித்தும் கூட்டணி வலியுறுத்தியது

கொழும்பு, நவ. 15

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தூதுக்குழுவினர் நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை அலரிமாளிகையில் சந்தித்தபோது செம்மணிப் புதைகுழி விவகாரம் தொடர்பாகவும் வலியுறுத்தியதாகக் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். குடாநாட்டில் செம்மணிப்பகுதியில் இருப்பதாகக் கூறப்படும் பாரிய புதைகுழிகள் சம்பந்தமாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழு, ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு ஆகியவற்றின் அத்தியாவசிய உதவியுடன் ஆராய்வதற்கு எடுக்கப்படும் சகல முயற்சிகளுக்கும் அரசாங்கம் தனது முழு ஒத்துழைப்பையும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுசிலாதேவி சிவசுப்பிரமணியம்

(முன்னாள் எழுதுவினைஞர், சுகாதாரத் திணைக்களம் யாழ்ப்பாணம்)

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நாயன்மார் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி சுசிலாதேவி சிவசுப்பிரமணியம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு காலமாகிவிட்டார்.

இவர் சோமசுந்தரம், காலஞ்சென்ற மயிலாம்பிகை ஆகியோரின் அன்பு மகளும், சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், கயலக்சி, பிரதர்சனா ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகாம்பிகை (ஆசிரியை பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற நடராசா (ஆசிரியர்), காலஞ்சென்ற சாரதாதேவி (முன்னாள் சுருக்கெழுத்து, தட்டெழுத்தாளர் யாழ். மாநகர சபை), மோகனதாஸ் (கனடா), குகனேசம்மா, ராகினி (ஆசிரியை, கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்), மதுசாலினி (கனடா), திபாகரி (கனடா), பிரபாகரி (கனடா), மாலதி (ஜேர்மனி), வன்னிநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை 15-11-98 இன்று காலை 10 மணிக்கு செம்மணி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
**சோமசுந்தரம்** (தந்தை)
**ராகினி** (சகோதரி)

71, நாயன்மார் வீதி,
நல்லூர்.
(60697)

## செல்லையா சிவஈஸ்வரன்

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், சுவிட்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவஈஸ்வரன் 13-11-98 இல் சுவிட்சர்லாந்தில் காலமானார்.

அன்னார் திரு. திருமதி செல்லையா தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் ரூபாவதியின் அன்புக் கணவரும் சிவனுயன், ரூபீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேஸ்வரி, கதிர்காம ஈஸ்வரன் (சுயன் அரிசி ஆலை, வவுனியா), ஞானேஸ்வரன் (சுவிஸ்), சர்வேஸ்வரன் (ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் நா. தங்கராசா (மானி. ப. நோ. கூ. சங்கம்), பொ. உதயகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிட்சர்லாந்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
**சர்வேஸ்வரன்**
(ஹற்றன் நஷனல் வங்கி)

இணுவில் மேற்கு,
இணுவில்.
(60691)

## இராமநாதன் மகேந்திரநாதன்

(பொறியியலாளர் — அமெரிக்கா)

வீமன்காமம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் அமெரிக்காவில் வசித்து வந்தவருமான இராமநாதன் மகேந்திரநாதன் 14—11—98 நேற்று அமெரிக்காவில் காலமானார்.

இவர் மன்மதகுமாரியின் அன்புக் கணவரும், கம்சானந்தினி, நிமலன் முரளி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராமநாதன் (இளைப்பாறிய ஆசிரியர், மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை), பரமேஸ்வரி தம்பதிகளின் மகனும், வடிவேலு (வடிவேலு அன் சன்ஸ்) சின்னம்மா தம்பதிகளின் மருமகனும் Dr. R. K. இளங்கோ (அமெரிக்கா), இரவீந்திரநாதன் (மருந்தாளர், அமெரிக்கா), Dr. நரேந்திரநாதன் (ஆஸ்திரேலியா), கஜேந்திரநாதன் (விரிவுரையாளர், அமெரிக்கா), திருமதி சுபத்திரா விஜயலட்சுமி முருகேந்திரன் (நோர்வே), செல்வி சுசீவா சிறிலக்சுமி (கணனி, இயக்குனர்), செல்வி சுகுணா வரதலக்சுமி (கணக்காளர்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

Dr. V. **சிவராசா** (மாமன்)
59, கோயில் வீதி,
கொக்குவில்.
(மெடிக்கல் சிளினிக் சுன்னாகம்)

**நா. அம்பிகைபாகன்** (சிறிய தந்தை)
மடத்தடி லேன்,
கோண்டாவில்.
(60692)

## திருமதி இந்துமதி யுகராஜ்

நல்லூரைப் பிறப்பிடமாகவும், தற்போது லண்டனில் வசித்தவருமாகிய திருமதி இந்துமதி யுகராஜ் லண்டனில் 13.11.98 இரவு காலமானார்.

அன்னார் தி.யுகராஜ் (லண்டன்) அவர்களின் பாசமிகு மனைவியும் விஜேந்திரன் — சகுந்தலாதேவி தம்பதிகளின் ஏக புத்திரியும், திரு.திருமதி தியாகேசனின் அன்பு மருமகளும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**நா. கோபாலசிங்கம்** (மாமன்)

இல, 11, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(60685)

## சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், நவ. 15

வண்ணார்பண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயத்தை அண்டிய பகுதிகளில் அண்மைக் காலமாக சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன.

கற்பக விநாயகர் ஆலயத்துக்கு வழிபட வருவோரின் சைக்கிள்களே அதிகமாகக் காணாமல் போவதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் ஆலயத்துக்கு வழிபட வந்த பெண் ஒருவரின் சைக்கிள் ஒன்று காணாமல் போய்விட்டது. இதுவரை மேற்படி ஆலயச் சூழலில் ஆறு சைக்கிள்களுக்கு மேல் காணாமல் போய்விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)


**நாகம்ஸ்**
சினிமா
சுன்னாகம்.
அரவிந்தசாமி - மதுபாலா
நடித்த
**ரோஜா**
(ரீல்ஸ்)
காட்சி:
10.30, 2.30 மணி
(60696)

**ராஜா டாக்கீஸ்**
யாழ்ப்பாணம்.
இன்று முதல் மீண்டும்
ரஜனி - மீனா
நடித்த
**முத்து**
(சினிமாஸ்கோப்)
தினசரி
10-30, 2-00, 5-00
(சி/5508)

**ஸ்ரீ செல்வா சினிமா**
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
தினசரி: 10-30, 2-30
பிரபு - தேவயானி
கவுண்டமணி, செந்தில்
நடித்த
என்னுயிர் நீதானே
[ புதிய வெளியீடு ]
(ஒறிஜினல் பிரமிட் CD யில்)
(60700)

**சிவாஸ்**
வெண்திரை
191, கஸ்தூரியார் வீதி,
(மேல் மாடி)
வின்சர் தியேட்டர் முன்பாக
விஜயகாந்த் - பானுப்பிரியா
நடித்த
பரதன்
காட்சிகள்:
10.30, 2.30 மணி
ஆங்கிலத் திரைப்படம்
மாலை 5-00 மணிக்கு
காண்பிக்கப்படும்
( சனி, ஞாயிறு மட்டும் )
(60694)

**றீகல்** டாக்கீஸ்
ஈச்சமோட்டை.
40 அடி அகலத் திரையில்
10-30 மணிக்கு
பிரபுதேவா - நக்மா
நடித்த
லவ்பேட்ஸ்
M. G. R. (இருவேடம்)
நாடோடி மன்னன்


## மயிலந்தன்னை கொலைகள்:

# 21 படையினர் மீதான வழக்கு திங்களன்று!

கொழும்பு, நவ. 15

மட்டக்களப்பு மயிலந்தன்னை தமிழ்க்கிராமத்தில் 1992 ஆம் ஆண்டு 70 தமிழ் மக்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு நாளை காலை கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதி கைதாஸ் கெரே விசாரணைகளை நடத்துவார்.

படுகொலைச்சம்பவம் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டு, சட்டமா அதிபரினால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ள 21 இராணுவ வீரர்கள் விசாரணையின்போது நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்படுவர்.

இதேவேளை மயிலந்தன்னைக் கிராமத்தில் வேறு 13 தமிழ் மக்கள் கடுமையாக தாக்கப்பட்டமை தொடர்பாகவும் மேற்படி இராணுவத்தினர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-7)


**YOGI** HOME SCIENCE ACADEMY

Basic Make - Up and Hair Dressing
(அடிப்படை ஒப்பனையும் தலை அலங்காரங்களும்)

புதிய வகுப்பு 25 - 11 - 98 அன்று ஆரம்பம்.


இதில் பாடக்குறிப்புக்களுடன் கூடிய செய்முறை விளக்கங்கள், சகல வைபவங்களுக்குமான முக ஒப்பனைகள், நவீன புதிய தலை அலங்காரங்கள், இந்திய, சிங்கள, குஜராத்தி, மடிசார் போன்ற வித்தியாசமான சாறி அணியும் முறைகள். இந்தப் பயிற்சி நெறி 15வகுப்புக்கள் மட்டும். முடிவில் செய்முறைப்பரீட்சைகள் மூலம் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

மற்றும் தையல், கேக் ஐசிங், பூக்கள் தயாரித்தல் Fabric Painting போன்ற வகுப்புக்களும் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கும் புதிய மாணவிகள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

Yogi Home Science Academy
75, அம்மன் றோட், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)
(60698)


## கண்ணீர்க் காணிக்கை



திருநெல்வேலி
சிற்பக் கலாஜோதி — சமதர்மவாதி
அமரர் **செல்லையா கந்தசாமி**

எமது குடும்பத்திற்கு ஒளி தந்து, எம்மையெல்லாம் வழி நடத்தி 10 - 11 - 98 அன்று அமரத்துவமடைந்த குடும்பத் தலைவர் செல்லையா கந்தசாமி அவர்களின் பாத கமலங்களில் எமது கண்ணீரைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (திங்கள்) நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

குறிப்பு:- எமது குடும்பத் தலைவர் அமரத்துவம் அடைந்தமை குறித்த தகவல் 12 - 11 - 98 அன்றைய உதயன் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது.

தகவல்:
**க. விமலரட்ணம் (மகன்)**
**செ. சட்டநாதர் (மருமகன்)**

காளிகோயிலடி,
திருநெல்வேலி.
(சி/5531)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மீனவருக்கு நஷ்டஈடு

# அமைச்சர் ராஜபக்ஷ உறுதி

## கூட்டணியினரிடம் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 15

யாழ். மாநகர சபைப் பிரிவிற்குள் வசிக்கும்— மீன்பிடித் தடையால் பாதிக்கப்பட்ட— மீனவக் குடும்பங்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கப்படும்.

இவ்வாறு கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ தம்மைச் சந்தித்த தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த யாழ். மாநகர சபை உறுப்பினர்களிடம் உறுதியளித்தார்.

இச் சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள கடற்றொழில் அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் மீனவர்கள் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்டச் செயலாளர் பொன். மதிமுகராசாவிடம் கடந்த வாரம் நேரில் சென்று முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த முறைப்பாடுகள் தொடர்பாகவே அமைச்சர் ராஜபக்ஷவுடன் யாழ். மாநகர சபைப் பிரதி முதல்வர் என். ரவிராஜ் மற்றும் உறுப்பினர்களான எஸ்.எஸ். கணேந்திரன், எஸ். அரவிந்தன் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினர்.

அப்போது மீனவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கப்படும் எனவும்—

மீனவர்கள் எதிர்நோக்கும் ஏனைய பிரச்சினைகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கதைத்து உடன் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்—

அமைச்சர் உறுதியளித்துள்ளார் என தமிழர் விடுதலைக் கூட்டணி அறிவித்துள்ளது. (உ-7)

## 'உதயன்' ஆதரவில்

# வடமராட்சியில் இன்று உதைபந்தாட்ட போட்டி

யாழ்ப்பாணம், நவ. 15

'உதயன்' நிறுவனத்தின் ஆதரவுடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் வடமராட்சி கல்வி வலயம் பாடசாலைகளுக்கிடையில் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று மாலை 4.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

முதலாம் பிரிவினருக்கான (18 வயதுக்கு உட்பட்ட பிரிவினருக்கான) இச் சுற்றுப் போட்டியில் எட்டுப் பாடசாலை அணிகள் மோதின.

இன்றைய இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியை எதிர்த்து தேவரையாளி இந்துக் கல்லூரி மோதவுள்ளது.

அரையிறுதி ஆட்டத்தில் தேவரையாளி இந்துக் கல்லூரி ஹாட்லிக் கல்லூரியையும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தையும்—

வென்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன.

வேலாயுதம் மகாவித்தியாலயம், தொண்டமனாறு வீரகத்தி மகாவித்தியாலயம், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, சிதம்பராக் கல்லூரி ஆகிய பாடசாலை அணிகளும் இச் சுற்றுப் போட்டியில் பங்கு பற்றின.

கல்விப் பணிப்பாளரும், சுற்றுப் போட்டிக் குழுத் தலைவருமான வ. செல்வராசா தலைமையில் இன்று நடைபெறும் இறுதி ஆட்டத்தில் வடமராட்சி கல்வி வலய கல்விப் பணிப்பாளர் சி. சிவராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

வெற்றி பெற்ற வீரர்கள் மற்றும் அணிகளுக்கான பரிசில்களை 'உதயன்' நிறுவனம் வழங்குகின்றது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தலைவர் மு. வேதாபரணம், செயலாளர் சி. வரதராஜன், பொருளாளர் க. முகுந்தன் ஆகியோரையும் மற்றும் உறுப்பினர்களையும் கொண்ட உதைபந்தாட்ட லீக்கின் செயற்குழு இந்தச் சுற்றுப் போட்டி மற்றும் இறுதி ஆட்டத்திற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளது. (உ-7)



தேவரையாளி இந்து



உடுப்பிட்டி அமெரிக்க மிஷன்

# சட்டவிரோத மின் வலிகாமத்தில் தீவிரம்

யாழ்ப்பாணம், நவ. 15

வலிகாமத்தில் சட்டவிரோதமாகமின்சாரம் பெறுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக இலங்கை மின்சார சபையினருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

சட்டவிரோத மின்பாவனையால் ஏற்படும்பளுகாரணமாக மின் தடை அடிக்கடி ஏற்பட்டு பாவனையாளர்கள் பாதிக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது,

சட்ட விரோத மின் பாவனையாளர்கள் குறித்து ஏனைய பாவனையாளர்கள் மின்சார சபைக்குத் தகவல் தந்து ஒத்துழைத்தால் மட்டுமே சீரான மின் விநியோகத்தைப் பாவனையாளர்களுக்கு வழங்க முடியும் என்று மின்சார சபையின் வடபிராந்தியப் பிரதிப் பொது முகாமையாளர் தெரிவித்தார். (உ-4)

# தென்னங்கன்று விநியோகம்

சுன்னாகம், நவ. 15

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்தினால் அப்பிரதேச விவசாயிகளுக்கு நல்லின தென்னங்கன்றுகள் சலுகைக் கட்டணத்தில் வழங்கப்படவுள்ளன.

20 ரூபா வீதம் விநியோகிக்கப்படவுள்ள இத்தென்னங்கன்றுகள் தேவையானோர் தத்தம் பகுதி கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-27)


கோண்டாவில் மேற்கு

## ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோயில்

(காளி கோயில்)

மேற்படி ஆலயத்தில் 01 - 11 - 1998 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் கோண்டாவில் தென்மேற்கு யா / 116 இன் கிராம சேவையாளர் திரு. ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நடைபெற்ற பரிபாலன சபையின் புதிய நிர்வாக சபைத் தேர்தலுக்கான கூட்டத்தில் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

| | |
|---|---|
| தலைவர்: | இ. நடராசா |
| உப தலைவர்: | இ. மகேந்திரன் |
| கௌரவ செயலாளர்: | சி. சோதிலிங்கம் |
| உப செயலாளர்: | அ. மகாதேவன் |
| பொருளாளர்: | ச. சண்முகநாதன் |

நிர்வாகசபை உறுப்பினர்கள்:

1) செல்வி ஞா. சிவஞானம்
2) திருமதி இ. லிங்காதேவி
3) திருமதி செ. இராசேஸ்வரி
4) திரு. செ. யோகநாதன்
5) திரு. ந. குணசீலன்
6) திரு. மு. ஜெயானந்தன்

பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க புதிய பரிபாலன சபையினரால் சிவஸ்ரீ சாமி ச. ஸ்ரீஸ்கந்தராசா குருக்களிடம் மீண்டும் மேற்படி ஆலயத்தின் பூசை உரிமை கையளிக்கப்பட்டது.

இ. நடராசா
தலைவர்
ஆலய பரிபாலன சபை

(60661)



## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 19 — 07 — 1947



உதிர்வு 07 — 11 — 1996

## திருமதி புவனேஸ்வரி அம்பலவாணர்

(எழுதுநர், சுகாதாரப்பகுதி, யாழ். மாநகரசபை)

என்றும் எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவர், தாய்,
பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

48, ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

(60682)



உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருஷம் ஐப்பசித் திங்கள் 29ஆம் நாள் (1998—11—15) ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிமுதல் 10-00மணி வரையுள்ள அத்த நட்சத்திரமும் தனுலக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| எமது ஏக புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>**நற்குணராசா**<br>(கட்டடத் திணைக்களம், யாழ்.)<br>அவர்களுக்கும் | எமது ஏகபுத்திரி<br>திருநிறை செல்வி<br>**நந்தினி**<br>(கல்வித் திணைக்களம், யாழ்.)<br>அவர்களுக்கும் |

யாழ். வண். வட-கிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலயத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யத் திருவருள் கைகூடியிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம் மணமகன் இல்லத்தில் இன்று (15—11—98) ஞாயிறு பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| திருமதி மனோன்மணி ஆனந்தராசா<br>இல: 52, குமார வீதி,<br>நல்லூர். | திரு.திருமதி பொ. வில்வராஜா<br>224, பிறவுண் வீதி,<br>யாழ்ப்பாணம். |

(இரு வீட்டார் அழைப்பு)

(60663)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு மகா வித்தியாலய அதிபர் திருமதி பி.எம்.ஜே.அன்ரனி அவர்களின் சேவைநலன் பாராட்டு விழாச் சிறப்பிதழ்

## இந்து மதகுரு அருளாசி

எமது தீவகக்கல்வி வரலாற்றில் 36 வருட காலம் பணியாற்றிய அதிபர் திருமதி பி,எம்.ஜே அன்ரனி அவர்களின் தன்னலமற்ற தியாக சேவை பாராட்டத்தக்கதாகும். எமது மகா வித்தியாலயத்தில் தன்னை முழு மனதுடன் அர்ப்பணித்துச் சிறந்த சேவையாற்றியவர் அதிபர்.

அவரும் அவர் குடும்பத்தினரான தந்தை, தாய், கணவர், சகோதரர்கள், மக்கள் அனைவரும் செய்யும் தொழிலே தெய்வமெனக் கருதி ஆசிரியர் பணியை மன நிறைவோடு செவ்வனே செய்து வருகிறார்கள்.

இவர்களுடைய பாரம்பரிய சேவை இறையருளால் தொடர்ந்து நடைபெறவும் சிறப்பாக அமையவும் பல்லாண்டுகாலம் இவர்கள் நீண்ட ஆயுளோடு வாழவும் இறையாசியை வேண்டி எனது நல்லாசியையும் வழங்குகின்றேன்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி!

**பிரம்மஸ்ரீ கா.புவனேந்திர சர்மா,**
இந்துமதகுரு, நெடுந்தீவு.

## பங்குத் தந்தையின் அருளாசி

தமது ஆசிரியப் பணி வாழ்வின் 36 ஆண்டு கால வாழ்வில், 33 முழு ஆண்டுகளைத் தான் பிறந்த மண்ணில் பணிபுரிந்து, அக்கால கட்டத்தின் இறுதி 3 ஆண்டுகள் அதிபர் பதவி வகித்து ஒய்வு பெற்றுச் செல்லும் அதிபர் திருமதி பி. எம். ஜே. அன்ரனி புஸ்பவதி அவர்களைப் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

'யான் பெற்றஇன்பம் பெறுக இவ்வையகம்' என்ற பெருநோக்குடனும், எங்கடன் பணி செய்து கிடப்பதே என்ற இறைநோக்குடனும் பணியாற்றிய சிறப்புடையவர்.

ஓய்வுபெறும் அவரின் சேவை தொடர்ந்தும் எம் சமூகத்திற்கும் சமயத்திற்கும் தேவை எனக்கூறி, ஓய்வு காலம் ஆண்டவனால் அருள் பொழியும் காலமாய் அமைய ஆசிகூறி, வாழ்க பல்லாண்டு என வாழ்த்துகின்றேன்.

**அருட்திரு லூயிஸ் மொன்போட்,**
பங்குத்தந்தை,
நெடுந்தீவு.

## தென்னிந்தியத் திருச்சபை ஊழியனின் ஆசிச் செய்தி

நெடுந்தீவில் நெல்மணியாய் விழுந்து, நேரிய உயர்கல்வி கற்று விஞ்ஞானப் பட்டதாரியாய் வித்தகர் உயர்வுக்காய் தன்னை வித்திட்ட செம்மல் திருமதி பி.எம்.ஜே. அன்ரனிஅவர்கள்.

வித்தகியாய் மண்ணில் வந்த இறைமைந்தர் குழந்தையாய் விருப்புறவே அவர் களத்தை சிறப்புற வைத்தார். சரீரம் நைப்புறக்க கடல் கடந்து நெடுந்தொலைவில் அமைந்திருக்கும் கல்வித்திணைக்களம் சென்று நெடுந்தீவின் குழந்தைகள் நலனுக்காகப் பல வேண்டி நின்றார்.

அன்புக்கடலாய்,பாசத்தின் சிகரமாய்,பணியின் கோலமாய் வாழ்ந்த அதிபர் அவர்களை இறைவன்பால் நன்றிகள் பல கூறி ஆண்டுகள் பல வாழ்ந்திடவே ஆசிக்கின்றேன்.

**நே. து. ஜெபநேசன்,**
தென்னிந்தியத் திருச்சபைக் குரு.

## கல்விப் பணிப்பாளர் வாழ்த்து

அலை கடலின் நடுவே, ஈழத்திரு நாட்டின் உச்சியிலே, அறிவுப் பசி தீர்க்கும் நெடுந்தீவு மகா வித்தியாலயத்தின் விஞ்ஞான பட்டதாரி ஆசிரியராக 1962 இல் சேவையை ஆரம்பித்த திருமதி பி. எம். ஜே. அன்ரனி அவர்கள் தமது 36 வருடசேவையின்போது அதிபர் பதவியை அலங்கரித்து, இன்று ஓய்வு பெறும் வேளையில் அவரை வாழ்த்துவதில்மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

52 வயதுடைய இவ் வித்தியாலயத்தின் வரலாற்றுடனும் வளர்ச்சியுடனும் பின்னிப்பிணைந்த இந்த அதிபர் நெடுந்தீவு வாழ் மக்களின் மூன்று பரம்பரையினருக்கு விஞ்ஞானக் கல்வியைப் போதிப்பதில் சிறப்பான பணியாற்றியுள்ளார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மிக்க இவர் எளிமையான தோற்றமும் அன்பு, அடக்கம் ஆகிய பண்புகள் ஒருங்கே அமையப்பெற்ற சிறந்த நிர்வாகியாக விளங்குகிறார். இவரிடம் கல்வி பயின்றவர்களே, இன்று இக் கல்லூரியில் ஆசிரியர்களாகப் பணியாற்றுவதால் அதிபர் பணி இவருக்கு மிக இலகுவாக உள்ளது,

திருப்தியான சேவை மூலம் மன நிறைவுடன் ஒய்வு பெறும் இந்த அதிபர் சகல வளமும் பெற்று தனது குடும்பத்தினருடன் சிறப்பாக நீண்ட காலம் வாழ இறையருளை வேண்டுகின்றேன்.

**ப. விக்னேஸ்வரன்**
கல்விப் பணிப்பாளர்
தீவக வலயம்,
வேலணை.1

## தனி இடம் பிடித்தவர்

எமது கிராமத்தின் உயர் கலைக்கூடமாக விளங்கும் நெடுந்தீவு மகாவித்தியாலயத்தின் பணிகளில், தனக்கெனத்தனி இடம் பிடித்தவர் இன்று ஓய்வுபெறும் அதிபர் திருமதி பி.எம்.ஜே. அன்ரனி அவர்கள். எமது கிராமத்தின் ஏழைக் குழந்தைகளின் உயர்வுக்காக தன் வாழ் நாளின் பெரும் பகுதியை அர்ப்பணித்தவர் அவர்.

உலகில் அறிவியல், தொழில்நுட்பம், சமூக மாற்றங்கள் என்பன மிக விரைவாக வளர்ந்து வருகின்றன. அவற்றுக்கு ஏற்ப எமது மாணவர்களும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்; அதற்கு அவர்கள் பாடசாலைச் சமூகத்தால் ஈர்க்கப்பட வேண்டும் என உழைத்த பெருந்தகையை ஓய்வு பெறும் இந்நாளில் என் சார்பாகவும் என் கட்சி சார்பாகவும் வாழ்த்துகின்றேன்.

**தோழர் மோகன்**
பொறுப்பாளர்,
நெடுந்தீவு. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி.

## வாழ்க எம் அன்னை!

பசுத்தீவாம் எம்தீவகத்தின் கல்வியின் கலங்கரை விளக்காக 52 ஆண்டுகளாக அரும் பணி ஆற்றி வருவது எமது பாடசாலையாகிய நெடுந்தீவு மகாவித்தியாலயம், இக்கலைக் கோயிலின் வாழ்வோடு தன் வாழ்வையும் இணைத்து வாழ்ந்தவர்கள் பலர். அவர்களுள் 3 தசாப்தங்களுக்கும் மேலாக தன்னை அர்ப்பணித்து சிறந்த ஆசிரியப்பணியை ஆற்றி ஆசிரிய மணியாக ஓங்கி உயர்ந்து நிற்பவர் தான் எங்கள் அதிபர் திருமதி புஸ்பவதி அன்ரனி அவர்கள்.

ஓய்வுபெறும் அதிபர் அவர்கள் பல நிறைவோடும் பல்லாண்டு வாழ பெற்றோர்கள்சார்பில் வாழ்த்துகின்றேன்.

**சு. கணேசலிங்கம்**
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.



திருமதி
பி. எம். ஜே. அன்ரனி

## சேவை விவரம்

1962 – உதவி ஆசிரியர் –
யா/ நெடுந்தீவு மகாவித்தியாலயம்
1972 – 1985 – உப அதிபர்
நெடுந்தீவு மகாவித்தியாலயம்
1986 – 1990 – யா/ கன்னியர் மட மகா வித்தியாலயம் (பகுதித்தலைவர்)
1991 – 1993 –
நெடுந்தீவு கொத்தணிச் செயலாளர்
1994 – 1995 – உப அதிபர்
நெடுந்தீவு மகா வித்தியாலயம்
1996 – இன்றுவரை – அதிபர்
நெடுந்தீவு மகா வித்தியாலயம்

## உதவிப்பணிப்பாளர் பாராட்டு

திருமதி பி. எம். ஜே. அன்ரனி அதிபர் அவர்கள் கடந்த நான்கு தசாப்தமாக நெடுந்தீவுக் கல்வியுடன் இரண்டறக் கலந்தவர். விஞ்ஞானப்பட்டதாரியான இவர் தம் துறையில் பல நூற்றுக்கணக்கான மாணவர்களை ஊக்குவித்து நல்வழிப்படுத்திபவர்.

அதிபராக இருந்த காலத்தில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை, க. பொ. த (சா/த) பரீட்சை, க. பொ. த (உ/த) பரீட்சைகளில் பாடசாலை நல்ல பெறுபேறுகளைப் பெற்றது. அகில இலங்கை மட்டத்தில் சித்திரப்போட்டியில் பாடசாலை மாணவர்கள் ஜனாதிபதி விருதினைப்பெற்றனர். இணைப்பாட விதான நிகழ்ச்சிகளிலும் பாடசாலை சிறந்து விளங்கியது. அத்துடன் பாடசாலை சிறப்பாக பொன் விழாக்கண்டதும் அதிபரின் காலத்திலேயே என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஓய்வு பெறும் அதிபரின் ஒத்துழைப்பும் வழிகாட்டலும் தொடர்ந்து பாடசாலைக்குக் கிடைக்க வேண்டுமென அவாவுகின்றேன்.

அதிபர் அவர்களும் குடும்பத்தினரும் நலனோடு பல்லாண்டு வாழ பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**சோ. தில்லைநாதன்**
உதவிக் கல்விப்புணிப்பாளர்
கோட்டக்கல்விப் பணிமனை, நெடுந்தீவு.

## உதவி அரச அதிபர் வாழ்த்து

நெடுந்தீவின் புகழ் பூத்த ஆசிரிய தம்பதிகளான திரு. திருமதி இராமநாதர் அவர்களின் சிரேஷ்ட புதல்வியாகப் பிறந்தவரே எம் அன்புக்குரிய அதிபர் திருமதி பி. எம். ஜே. அன்ரனி அவர்கள்.

தமிழகத்தில் விஞ்ஞான உயர் கல்வியைக் கற்று நெடுந்தீவு மகாவித்தியாலயத்தின் முதல் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்றவர்.

இவரிடம் கல்விகற்ற எம் போன்ற மாணவர்கள பலர் இன்று பல்வேறு உயர் பதவிகளில் விளங்குகின்றார்கள் என்றால், அதற்கு இவரின் அன்பும் அறிவும் நிறைந்த வழிகாட்டலே காரணம்.

கற்றல், கற்பித்தல் முயற்சிகளுடன் நின்றுவிடாது ''ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' என்பதை அறிவுறுத்திய அன்னாரின் கடந்த காலப்பணிகளை நினைவுகூர்ந்து அனைத்துப் பழைய மாணவர்கள் சார்பிலும் அன்னாருக்கு எம் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**[illegible]**
உதவி அரசாங்க அதிபர், நெடுந்தீவு.

## பிரதேச சபைத் தலைவர் வாழ்த்து

''அன்பர் பணி செய எனை ஆளாக்கி
விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே''

என்பதற்கு ஏற்ப கடந்த 36 வருடங்களுக்கு மேலாக நெடுந்தீவு மகாவித்தியாலயத்தின் உதவி ஆசிரியராக, உப அதிபராக, அதிபராகக் அளப்பரிய சேவையாற்றியவர் திருமதி பி.எம். ஜே. அன்ரனி அவர்கள்.

சிறந்த விஞ்ஞான ஆசிரியராகப் பணி புரிந்த இவரிடம், மறைந்தும், பொதிந்தும் கிடந்த பல்வேறு திறன்களையும், பண்புகளையும் இணைப் பாடவிதான நிகழ்வுகளிலும், கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றிலும் காணக் கூடியதாக இருந்தது.

பெற்றோர், ஆசிரியர் தொடர்புகள். சமூகப்பணி ஆகியவற்றிலும் சிறந்து விளங்கிய அதிபர் அவர்கள் ஓய்வு பெற்றாலும், நெடுந்தீவின் கல்வி வரலாற்றில் முக்கிய பங்கினைப் பெறுவார் என்பது எம் நம்பிக்கை.

**புலவர் ஏ. டபிள்யு.அரியநாயகம்**
(ஜே. பி. யு. எம்)
தலைவர், பிரதேச சபை
நெடுந்தீவு.

## ஆளுமையுள்ள அதிபர்

தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளன் என வாழ்ந்து கல்விக்கோர் அணிகலமாக உண்மை நேர்மை என கண்ணியமாகக் கடமையிலேயே உற்சாகத்துடன் செயற்படுபவர் எமது அதிபர் திருமதி பி. எம். ஜே. அன்ரனி அவர்கள்.

இவரது 36 வருட சேவைக் காலத்தில் சிறந்த ஆசிரியராகவும் அதிபராகவும் எமது கிராமத்திலே நீண்டகாலம்பணியாற்றிப் பல கல்விமான்களை உருவாக்கிய பெருமைக்குரியவர்.

இவரை நாம் நல் ஆளுமையுள்ள அதிபராகக்கண்டோம்; ஆசிரியர் வாண்மை விருத்திக்கும் மற்றவர்களின் தேவைகளை உணர்ந்து அடையக்கூடிய இலக்கை எய்துவதற்கும் வழிகாட்டியவர்.

செயற்றிறம் மிக்க உண்மையான சேவையாளரை ஓய்வு பெறும் இந்நாளில் மனமார வாயார வாழ்த்தி இவரது குடும்பத்திற்கும் இவருக்கும் எல்லாச்செல்வங்களும் கைகூடி சீரும் சிறப்புமாகப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

**நெடுந்தீவு மகாவித்தியாலய ஆசிரியர்கள்.**

விளம்பர இல: (60584)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை
திருமதி த. தேவராஜன் அவர்களின்
அன்புத் தாயார்

### திருமதி நல்லநாயகி திருஞானசம்பந்தர்

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யாழ். இந்து மகளிர் கல்லூரி.

(90645)

## புலேந்திரன் விரைவில் ஓய்வு?

குருநகர், நவ. 15

வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் மேலதிகக் கல்விப் பணிப்பாளர் சி. புலேந்திரன் சுகயீனம்காரணமாக, தமது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் சேவையிலிருந்து இளைப்பாறுவதற்கானஏற்பாடுகளைமேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நெருப்புக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ள அவர் தற்போது கொழும்பில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

(உ-51)

## வேம்படி மகளிர் கல்லூரி
## ஆண்டு 6 அனுமதி - 1999

1. விண்ணப்பித்தவர்களில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் அனுமதிக்கப்படுவர். அனுமதி விவரம் தனித்தனியாக அறிவிக்கப்படும். மேலதிக விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
2. ஏனையோர் மீளளிக்கப்படும் விண்ணப்பக் கட்டணத்தை 10 - 12 - 98 -க்கு முன்னதாகக் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

-அதிபர்

(சி/5521)

## கேள்வி அறிவித்தல்

பிரதம எந்திரி அலுவலகம், நிர்மாணத்திணைக்களம்,
யாழ்ப்பாணம்

கீழ் வரும் வேலைக்கான கேள்விகள், யாழ்ப்பாணம், நிர்மாணத்திணைக்களத்தினரால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபையினரால் 1998 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி முற்பகல் 10-30 மணி வரை யாழ்ப்பாணம் பிரதம எந்திரி அலுவலகம் நிர்மாணத்திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) கட்டடம் நிர்மாணிப்பதற்கு தரம் எம் — 8 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.

ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தினால் [இக்ராட்] வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்களடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தகுதியுடையோர் உரிய கேள்வி வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் அமைந்துள்ள நிர்மாணத்திணைக்களம், நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்று கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| 1. நெல்லியடி சந்தை விஸ்தரிப்பு கட்டம் - 1 | 20,000/- | 500/- |

கேள்விப் பத்திரங்களை 1998 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை யாழ்ப்பாணம், நிர்மாணத்திணைக்கள நிறைவேற்று எந்திரியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

இவை தொடர்பான மேலதிக விவரங்களை, நிறைவேற்று எந்திரி, நிர்மாணத் திணைக்களம். யாழ்ப்பாணம் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.


எந்திரி ந. சுந்தரமூர்த்தி
பிரதம எந்திரி
நிர்மாணத்திணைக்களம், யாழ்ப்பாணம்.

பிரதம எந்திரி அலுவலகம்,
நிர்மாணத்திணைக்களம்,
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

(சி/5520)




## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 12 — 08 — 1951 | 16 — 10 — 1998 |

அமரர்
### முத்து கனகரெத்தினம்


16 - 10 - 98 அன்று சிவபதமடைந்த எமதுஅப்பாவின் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்கள், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்கள், ஆறுதல் வார்த்தைகள் கூறியோர் மற்றும் பல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (15 - 11 - 98) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி:- கனகரெத்தினம் ரெத்தினம்
மகள்:- க. சுபோதினி
மகன்:- க. வருணன்
மற்றும் தாய், சகோதரர்கள், மைத்துனர்கள்.

முதலாம் ஒழுங்கை,
அரசடி, நல்லூர்,
யாழ்ப்பாணம.

(60669)

## 2ஆம் ஆண்டுநிறைவு நினைவஞ்சலியும் சிரார்த்த தினமும்



| தாயின் மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 30 — 12 — 1935 | 07 — 11 — 1996 |

### திருமதி சரஸ்வதிப்பிள்ளை கோவிந்தசாமி

சிரார்த்த திதி: ஐப்பசி 30 ஆம்திகதி (15-11-1998)
ஞாயிற்றுக் கிழமை அபர பக்க துவாதசித் திதி

எமது குடும்ப இல்லத் தலைவிபாகவும் எம் அன்புத் தெய்வமாகவும் விளங்கிய அம்மா சரஸ்வதியே! தங்களின் திடீர் மறைவினால் யாங்கள் உங்களின் நேசக்கரமிழந்து தவிக்கின்றோம் அம்மா! சிரார்த்த தினமாகிய இன்று செய்யப்படும் சிரார்த்தத்தை உங்களின் ஆன்மா ஏற்று உய்தி பெற்று சாந்தியடைக எனப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள்
அன்புக் கணவன், பிள்ளைகள்,
பேரன், பேர்த்தி.

(கி-5525)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

சு. கதிர்காமநாதன் என்பவருடைய காசோலை (இல. 696815) கடந்த 11. 11. 98 அன்று கோப்பாய்ச் சந்திக்கும் நீர்வேலிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ராஜ்மணி பந்தல் சேவை, நீர்வேலி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (60648)

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த கருணாதேவி யோகேஸ்வரன் ஆகிய எனது 566243040V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை 4.11.98 அன்று யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யோ. கருணாதேவி, சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (60684)

வேலுப்பிள்ளை தங்கராசா ஆகிய எனது சிமெந்து கூட்டுத்தாபனத்தில் வேலை செய்த E. P. F. கடிதங்கள் அடங்கிய கோவை யாழ். நகருக்கும் கே. கே. எஸ். வீதி தாவடிக்கும் இடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தங்கராசா, தபாலகம், காங்கேசன்துறை என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (60675)

யாழ்ப்பாணத்திற்கும் இளவாலைக்கும் இடையில் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், காணிஉறுதி, கடிதங்கள் அடங்கிய மஞ்சள் நிற பைல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இளவாலை தபால் நிலையத்தில் அல்லது சண்டிப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் உலகநாதரிடம் (கிராமசேவையாளர் — J/150) ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி/5526)

## விற்பனைக்கு

அஸ்பெஸ்ரஸ் சீற், தட்டு ஓடு, நிலை யன்னல், பாலைத் தீராந்தி என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இ. சத்தியசீலன், இல. 43, யமுனா வீதி, நல்லூர். (60644)

நல்ல நிலையிலுள்ள Gestetner 145 மொடல் றோணியோ இயந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு: ம. சுஜீவன், 8/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (60650)

## தேவை

தமிழ் ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் (Type Writers) மற்றும் றோணியோ இயந்திரங்கள் தேவை. தொடர்பு: ம. சுஜீவன், 66, மணிக்கூட்டு வீதி (ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம். (60651)

## LOGIC CLASS

2000 A/L வகுப்புகளுக்கான Logic பிரத்தியேக வகுப்புகள் நடைபெறுகின்றன. இல. 17, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (60642)

## புறோயிலர்

புறோயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. இல. 15 மெமோறியல் லேன், மானிப்பாய். (60657)

இறைச்சிக்கோழி (புறோயிலர்) விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (60680)

## FOR SALE

Pioneer 5 Piece Music Centre with PRM 60 Box Speakers including Cabinet also One Deep Freezer. Thanapalasingam, 19-Murugesar Lane, Muthiraisanthaiyadi, Nallur, (60676)

---

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச

# விசேட பொதுக்கூட்டம் - 29-11-98

மேற்படி கூட்டம் 1998-11-29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9.30 மணிக்கு (புதிய நேரம்) யாழ். சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் சமாசத் தலைவர் திரு. ச. முருகனேசன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. கூட்ட நிகழ்ச்சி நிரலும், வரவு செலவுத்திட்டம் 1999, கணக்காய்வு அறிக்கைகள் 1995, 1996, 1997, அதிகாரக் கடிதமும் அங்கத்துவ சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தற்போது எம்முடன் தொடர்பு இல்லாத அங்கத்துவ சங்கங்கள் இவற்றை சமாச காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். வரவு செலவுத்திட்டம், கணக்காய்வு அறிக்கைகளை விரிவாகப் பார்வையிட விரும்பும் சங்கங்கள் அலுவலக நேரங்களில் (காலை 8.30 - 4.30) வந்து பார்வையிட்டு ஒத்துழைக்குமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி!

பதில் மாவட்ட செயலாளர்,
யாழ். மாவட்ட சி.க.கூ. சங்க சமாசம்.
291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (சி/5518)

---

# 'சீடா' விஞ்ஞான செய்முறைத் தேர்வு

மேற்படி தேர்வு 17-11-98 அன்று நடைபெறும். 16-11-98இல் முன்னாயத்த அறிவுறுத்தல்களையும், 17-11-98 காலை வினாத்தாள்களையும் அதிபர்கள் கோட்டங்களில் பெற்றுக் கொள்ளவும்.

- இணைப்பாளர்.

(60659)

---

# தேவை

யாழ். நகரில் உள்ள பிரபலமான விற்பனை நிலையத்திற்கு பில் கிளாக் (BILL CLERK) தேவை. கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சையில் (G.C.E. O/L) வர்த்தக பாடத்தில் திறமைச்சித்தி உள்ள ஆண்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 21 — 11 — 1998

இல. 810,
மே/பா. உதயன்.

(60683)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

## சின்னட்டி முத்தையா

பிறப்பு 16 — 04 — 1927
இறப்பு 16 — 10 — 1998

திதி: துவாதசி 15 — 11 — 98

எங்கள் இனிய குலவிளக்கே! பாசம்
மிகுந்த தந்தையே! அன்புத் தெய்வமே!
உங்கள் புகழுடல் மறைந்து
ஆண்டுகள் பல சென்றாலும் எங்கள்
ஜீவன் உள்ளவரை மறவோம்.

உங்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

இன்று (15 - 11 - 98) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மஞ்சத்தடி வீதி,
இணுவில். (60677)

---

உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் வெகுதானிய வருடம் ஐப்பசி மாதம் 29 ஆம் நாள் 15 - 11 - 98 ஞாயிற்றுக்கிழமை காலை 9.01 மணி முதல் 10.58 மணி வரையில் வரும் சுபமுகூர்த்தத்தில்

எமது புதல்வன்
திருநிறை செல்வன்
ஹரிஷங்கர்
(ஷாங்)



எமது புதல்வி
திருநிறை செல்வி
செல்வரதி

ஆகியோருக்கு திருமாங்கல்யதாரணம் கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் நடைபெறத் திருவருள் கை கூடியிருப்பதால் அத் தருணம் தாங்களும் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி ஈ. சண்முகராசா (கனடா)
திரு. திருமதி வி. ரவிகுலராஜன்
1/4, B 91, பாம் வீதி,
கொழும்பு-5

திரு. திருமதி கா. செல்வரட்ணம்
29, இராஜசிங்க வீதி,
கொழும்பு-6

(60672)

---

# மீண்டும் சுன்னாகத்தில் ஒலிம்பியா

ஒலிம்பியா விவசாய சேவை: விவசாயிகளே! உங்களுக்குத் தேவையான உரம், கிருமிநாசனி (மார்ஷல் உட்பட) தெளிகருவி போன்றவற்றை 16 - 11 - 98 முதல் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஒலிம்பியா சிமெந்து விற்பனை: அதிக தரம் கூடிய "மிற்சுயி" யப்பான் நாட்டு சிமெந்தினை ஒரு குறிப்பிட்ட விலையில் தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

ஒலிம்பியா ஓட்டோ வேக்ஸ்: மின்சார மோட்டர்கள் றீவைண்டிங் செய்தல், குளிர்சாதனப் பெட்டிகள் திருத்தம் செய்தல் போன்றவற்றை எமது "மின்சார வேலைத்தலம்" மீண்டும் வெகு விரைவில் ஆரம்பிக்கவுள்ளது என்பதையும் அறியத்தருகின்றோம்.

ஒலிம்பியா இல. 23, 25, சந்தை தெற்கு வீதி,
சுன்னாகம். (வாழைக்குலைச் சந்தைக்கு அருகில்)

(60660)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## குதிரை விடும் காட்சி!

வடக்கு — கிழக்கு மாகாண சபையின் புதிய ஆளுநராக மேஜர்ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனாவை ஜனாதிபதி நியமித்திருக்கிறார்!

யாழ். குடாநாட்டின் கட்டளைத் தளபதியாக இருந்த அசோகா, இராணுவத்திலிருந்து ஒய்வு பெற்ற ஒருசில மணி நேரத்தில் ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஆளுநர் பதவிக்குப் பல்வேறு பேரின் பெயர்களும் அடிபட்டன. தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளாலும் பல பெயர்களும் சிபார்சு செய்யப்பட்டிருந்தன. ஆனால் மக்களைத் திடுக்கிட வைக்கும் வகையிலும், அரசியல் கட்சிகளை ஏமாற்றும் விதத்திலும் ஜனாதிபதியின் நடவடிக்கை அமைந்துள்ளது.

உண்மையில், வடக்கு— கிழக்கு மாகாண சபை தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு கிட்டவும் நிற்கவில்லை, அதன் நிர்வாக, நிறைவேற்று அதிகாரங்கள் கூட மிகமிக மட்டுப்படுத்தப்பட்டனவே. ஆனால், அரசியல் தலைமைத்துவம் அங்கு இல்லாததால் ஆளுநரே எதனையும் தீர்மானிக்கும், முடிவு செய்யும் முக்கிய இடத்தில் வைக்கப்பட்டுள்ளார்,

இத்தகைய பதவிக்கு சிவில் அதிகாரி ஒருவரையோ, அரசியல் ஆதரவாளர் ஒருவரையோ நியமிக்காமல், இராணுவ அதிகாரி ஒருவரை நியமித்திருப்பது வடக்கு—கிழக்கில் இராணுவ ஆட்சி ஒன்றுக்கு முன்னோடியாக அமையுமோ என்ற சந்தேகத்தை, அச்சத்தை மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளது.

ஒய்வு பெற்ற இராணுவ அதிகாரிதானே, முன்னரும் இராணுவ அதிகாரி ஒருவர் வடக்கு — கிழக்கு ஆளுநராகப் பதவி வகித்திருக்கிறார் தானே என்று "கதைக்கு"ச் சொன்னாலும், வாதத்துக்கு முன்வைத்தாலும், இந்த நியமனத்தில் உள்நோக்கம் ஒன்று, பெரும் சூழ்ச்சி இருப்பதாகவே சந்தேகமுற வேண்டியுள்ளது.

இந்த நியமனத்தை ரெலோ, தமிழர்விடுதலைக் கூட்டணி ஈ. பி, ஆர். எல். எவ். ஆகியன கண்டித்துள்ளன. ஏனையவை கண்டிக்கவும் இல்லை. ஈ.பி.டி.பியோ இந்த நியமனத்தை எதிர்க்கவில்லை.

ஆகையால், ஆளுநர் விவகாரத்தில், இந்தக் கட்சிகள் ஒரே குரலில் எதிர்ப்புத் தெரிவித்து, இந்தநியமனத்தை வாபஸ் பெறச் செய்யும் என்று எதிர்பார்க்க முடியாது. ஒவ்வொரு கட்சியும் தத்தமது நலன்களைக் கருத்திற் கொண்டு வெவ்வேறு திசை செல்லும். வழமை அது தானே!

ஒன்று இரண்டு கட்சிகள் தனித்து எதிர்த்து, கண்டித்து அல்லது ஆட்சேப அறிக்கைகள் விட்டு சந்திரிகாவின் நோக்கத்தைத் தடுக்க முடியாது.

இந்த விடயத்திலும் தமிழ் மக்களின் மனோநிலையும், கருத்தும் ஒருவகையானதாக இருக்க, கட்சிகள் தத்தமது நலன் கருதி வேறு வழி செயற்படும் போக்கு மாறாத வரை, அந்தக்கட்சிகள் மீது மட்டுமல்ல, தமிழ் மக்கள் மீதும் அரசுத் தரப்பு குதிரைவிடும் காட்சி மாறமாட்டாது.

# மற்றவருடன் கனிவுடன் வாழ்ந்தால் எமக்குள்ள கவலைகள் நீங்கும்

ஒரு நாளிலே நாம் பலப் பல பேர்களைச் சந்திக்கின்றோம். அத்தனை பேரையும் நாம் எவ்வாறான கண்ணோட்டத்துடன் பார்க்கின்றோம், சந்திக்கின்றோம், கதைக்கின்றோம், பழகுகின்றோம்! எம்மை அன்போடு சந்தித்தவர்களுக்கு ஒரு புன்முறுவல் காட்ட எமக்கு எவ்வளவு கடினமாக இருக்கின்றது!

நாம் எப்படி எப்படியோ எல்லாம் இருக்கலாம். பெரிய பெரிய பதவிகளை வகிக்கலாம் பல பெருமை மிக்க பட்டங்களைப் பெற்றிருக்கலாம். பணம், பொருள், செல்வாக்கு படைத்தவர்களாகக் கூட இருக்கலாம். எது எப்படி இருப்பினும், வாழ்வின் அடிப்படை அம்சங்களை அலட்சியம் செய்தால் ஆணிவேரற்ற மரத்திற்கும், அடித்தளமற்ற கட்டடத்திற்கும் ஒத்தவராகவே இருப்போம்!

ஒரு நடவை எறும்புக் கூட்டம் ஒன்று வரிசையாக பாதையின் குறுக்காகச் சென்று கொண்டிருந்தது. அப்பாதையினாலே இரண்டு யானைகள் வந்து கொண்டிருந்தன. ஒரு யானை மற்றயதை நோக்கி, "பாவம் எறும்புகள்!... இப்பாதையினாலே நாம் தொடர்ந்து போவோம் என்றால் அவற்றைப் பிரித்து விடுவோம்; சிலவேளை மிதித்தும் விடுவோம். எனவே நாம் வேறு வழியால் செல்வோம்" என்று கூறியது. பின்னர் இரண்டும் வந்த வழிபால் திரும்பிச் சென்றன.

இதைப் பார்த்த அந்த எறும்புக் கூட்டத்தின் தலைவன், "யானைகள் இவ்வளவு பெரிய மிருகங்களாக இருப்பினும் எமக்குப் பயப்படுகின்றனவே!... ஏனென்றால் அவை திரும்பியல்லவா செல்கின்றன" என்று சொன்னது. இதைக் கேட்ட தலைவனின் தளபதி "பாவம்"!... அவைகளை நாம் ஒன்றும் செய்யாது விட்டு விடுவோம்" என்றதாம்.

எந்த அளவிற்குப் பெரியவனாக மாறுகின்றாயோ, அந்த அளவிற்கு அனைத்திலும் உன்னைத் தாழ்த்து என்று சீராக் ஆகமம் மூன்றாம் அதிகாரத்திலே படிக்கின்றோம்.

எமது அன்னைமரியாள்பாடுவாள்: "ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப்பெருமைப் படுகின்றது... ஏனெனில் அவர் தம் அடிமையின் தாழ் நிலையைக் கண்நோக்கினார்" (லூக் 1: 47-48)

மத்தேயுவின் மலைப் பொழிவினிலே, "கனிவுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்" (மத்.5:5) என்று காண்கின்றோம். இயேசுவே, 'நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உள்ளவர்' என்று எம்மைப்பார்த்துச் சொல்வார்.

நாம் வாழுகின்ற இடங்களிலும், பணிபுரிகின்ற தளங்களிலும் பழகுகின்ற மனிதரோடு கனிவாக வாழப் பழகுவோமாயின் நாம் எப்போதும் மகிழ்ச்சியாகவே இருப்போம். பிறரையும் சந்தோஷப் படுத்துவோம்.

கனிவுடன் வாழ்வோம் என்றால் பல கவலைகள் மாறும்; கஷ்டங்கள் தீரும். இந்நாள் நன்நாளாக நம் எல்லோருக்கும் அமையட்டும். இறையாசீர் உங்களோடு இருப்பதாக. ★

**ஞாயிறு நற்பிரசாதம்**

**அருட் திரு. அன்புராஜா**

# எதிரொலி:

● ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகளுடன் புறப்படவிருந்த "லங்கா முடித்த" கப்பல் கடல் கொந்தளிப்புக் காரணமாக உரிய நாளிற் புறப்படவில்லை.

★ காரணம், கடற் கொந்தளிப்பு மட்டுந்தானா, கருத்துக் கொந்தளிப்புமா?

● பிரிட்டிஷ் மகாராணியாருக்கும் அவருடைய மகன் சாள்ஸிற்குமிடையேயுள்ள உறவிற் கசப்பு.

★ தன் மகனுடன் கமீலா பார்க்கர் என்ற பெண்ணைச் சேர்த்துப் "பார்க்க" மகாராணியார் விரும்பாததுதான் காரணமோ?

● இனப்பிரச்சினை சம்பந்தமான பேச்சுவார்த்தைகளிலே மத்தியஸ்தம் வகித்துச் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு நெல்ஸன் மண்டேலா முன்வந்துள்ளார்; பிரித்தானிய வெளிவிவகார அமைச்சரும் தன் நாட்டின் நிலைப்பாட்டை விளக்கியுள்ளார். ஆனால் இலங்கை அரசு மௌனம் சாதிக்கின்றது.

★ சமாதானத்துக்காகத்தான் நாங்கள் போர் செய்கின்றோம், ஆகவே போரிலே நாம் வெற்றியடைய உதவுங்கள்; பின்னர் சமாதானம் பற்றிச் சாவகாசமாகப் பேசலாம் — என்பதுதான் இந்த மௌனத்தின் அர்த்தமோ?

● பஸ் சாரதிக்குப் பின்னால் வைக்கப்பட்டிருந்த சூட்கேசுக்குள்ளிருந்து "கீ...கீ......" என்ற சத்தம் கேட்டதால் "குண்டு" என்று கத்திக் கொண்டு சாரதி ஓட பயணிகளும் பதறித் துடித்துக் கொண்டு ஓடினார்களாம்.

★ "என்னைப் போன்ற ஒருவர் சாரதிக்குப் பக்கத்தில் அமர்ந்தால் என்னவெல்லாம் நடக்குமோ? எனப் பயப்படுகின்றார் வாய்வுக் கோளாறினால் அவஸ்தைப்படும் ஒருவர்!

● பட்டதாரிகள் மட்டும் கொண்ட அரசியற் கட்சி ஒன்றை அமைப்பதற்குத் தென்னிலங்கையில் முயற்சி.

★ அரசியலிற் குதித்துத் தேர்தலிலும் வெற்றி பெற்றால், பட்டதாரிச் சம்பளத்தை விடப் பல மடங்கு உழைக்கலாம் என்ற இரகசியத்தைக் கண்டு பிடித்து விட்டார்கள், பலே ஆசாமிகள்!

● தமிழ் மக்கள் இந்த நாட்டின் பாரம்பரியக் குடிமக்கள் அல்லர்; அவர்கள் இடையில் வந்து குடியேறியவர்களே — எனத் தென்னாபிரிக்கத் தொலைக்காட்சிப் பேட்டியொன்றில் இலங்கை ஜனாதிபதி கூறினாராம்.

★ பாரம்பரியக் குடிமக்கள் அல்லர் என அடித்துச் சொன்னால்தானே, பாரம்பரியப் பிரதேசம் இல்லை என்பதையும் அழுத்திச் சொல்லலாம்!

● தமிழ் மொழி அமுலாக்கலில் அரசின் அசமந்தப் போக்கிற்கு எதிராகத் தமிழ்க் கட்சிகள் போர்க் கொடி.

★ நோக்கம் நிறைவேறும் வரை கொடி பறந்து கொண்டிருக்குமா? அல்லது யாரையாவது சந்தித்துப் பேசியபின் கம்பத்துடன் சுருட்டி வைக்கப்படுமா என்பதை அறியத் தமிழ் மக்கள் ஆவலாக இருக்கின்றனர்!

● மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் தன் முழுப் பதவிக் காலத்தையும் பூரணப்படுத்திய பின்னரே தேர்தல் நடைபெறும். அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் அது நடைபெறும் என்பதெல்லாம் வீண் வதந்தி என்கிறார் ஜனாதிபதி.

★ தேர்தலைப் பற்றி அறிவிப்பது ஆளுங் கட்சியாக இருக்கலாம்; ஆனால் எப்போது நடைபெறும் என்பதைத் தீர்மானிப்பதில் மாற்றுக் கட்சிகளுக்கும் பங்குண்டு என்பதைப் புறக்கணிக்க முடியாது!

● மத்திய இந்தியாவில் பூகம்பம் ஏற்படும் என நிபுணர் ஒருவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

★ தேர்தல் நடக்க இருப்பதைத்தான் அப்படிக் குறிப்பிடுகின்றாரோ......?!

- இடியன்.

# ஆறு சந்தேக நபர்கள் புனர்வாழ்வு முகாமுக்கு

யாழ்ப்பாணம், நவ. 15

மாங்குளத்தில் படையினரிடம் சரணடைந்தவர்கள் என்று தெரிவித்து விடுதலைப் புலிகள் சந்தேக நபர்கள் ஆறுபேர் நுகேகொடவிலுள்ள ஹங்கொடவெல மெட் செவன புனர்வாழ்வு முகாமிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்தச் சந்தேக நபர்களின் விவரங்கள் கொழும்பிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகத்தினால் குழுவின் யாழ். அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மெட் செவன முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களின் விவரம் வருமாறு:-

★ குணசிங்கம் பொபிதா (வயது 15)— பாண்டியன் குளம், மல்லாவி.

★ சோமசுந்தரம் வினோதினி (வயது 19)— முதலாம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

★ மண்டலியா இராசமணி (வயது17)—யோகபுரம், மல்லாவி.

★ கணபதி ஜெகதீஸ்வரி (வயது17)— நீவில், உருத்திரபுரம்,

★ சதாசிவம் சந்தியா (வயது18)— தச்சனார்மருதமடு, மன்னார்.

★ மரியதாஸ் இந்திராதேவி (வயது20)— முருகன் கோயிலடி, மன்னார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டு அனுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட நான்கு பெண்கள் வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அதிகாரி எஸ். சிறிதரனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

★ தில்லைநாதன் தவச்செல்வி —வரணி,

★ தில்லைநாதன் தவராணி— வரணி,

★ சண்முகம் ஜெயலட்சுமி —பளை,

★ தம்பிராசா சாந்தி— யாழ்ப்பாணம்,

ஆகியோரே வெலிக்கடையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களாவர். (உ-5).

## பட்ஜெற் விவதாம்:

# கோரம் இல்லாததால் சபை ஒத்திவைப்பு

கொழும்பு, நவ. 15

வரவு—செலவுத் திட்டம் மீதான விவாதம் நான்காவது நாளாக நேற்று முன்தினம் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம், சபையில் கோரம் இல்லாதகாரணத்தால் சபை திங்கட்கிழமை வரை ஒத்தி வைக்கப்பட்டது.

விவாதத்தில் ரெலோ முதல்வர் அடைக்கலநாதன் பேச எழுந்தபோது, ஐ. தே. க. வின். எம்பியான அஸ்வர் சபையில் கோரமில்லைஎன்று தெரிவித்ததும் சபை நடவடிக்கைகளை எதிர்வரும் திங்கள் வரை ஒத்திவைப்பதாகக் குழுக்களின் தலைவர் அறிவித்தார். (உ-3)

**நாளை**

ஐப்பசி 30

திங்கட்கிழமை

திதி: திரயோதசி

முழுவதும்

நட்சத்திரம்; சித்திரை

பிரதோஷ விரதம்

சுபநேரம்: 12.07 1.37

ராகுகாலம்: 7.37-9.07

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# டாக்டர் பதில் கடமை

நெல்லியடி, நவ. 15

வரணி மத்திய மருந்தக பொறுப்பதிகாரியான பெண் டாக்டர் விடுமுறையில் கொழும்புசென்றதையடுத்து, இம் மருந்தகத்தில் பதில் கடமைக்கு டாக்டர் எஸ். கதிர்காமத்தம்பி கடந்த வாரம் முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார்

)ஐ-109)

**உதயவாக்கு**

தொலை நோக்கும், செயல்திறனும் வெற்றிக்குப் படிகளாகும்.

- அரிஸ்டோட்டில்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொலை பேசிச் சேவை



உள்நாட்டு வெளிநாட்டு
நேரடித் தொலைத்
தொடர்புகளைப்
பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்

## எரிக் கணேஷ்
### மூக்குக்கண்ணாடி விற்பனையாளர்

இல. 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம் 021 - 2486

(சி-5527)

# 45 ஆம் நாள் நீங்காத நினைவலைகள்

ஜனனம்
18
—
07
—
1991



அகால
மரணம்
02
—
10
—
1998

செல்வன்

## சிவராசா ரகுலாதன்
(ரம்சன்)

(2 ஆம் ஆண்டு மாணவன், யா/நுணாவில் கிழக்கு
அமிர்தாம்பிகை வித்தியாலயம்)

எம்முடன் நீ வாழ்ந்த ஏழுவருடங்களும்
எமக்கு ரம்மியமடா ரம்சா இன்று
எம் வாழ்வு கம்மியாகிக் கதறுகின்றோம்
நாள்கள நாற்பத்தைந்தல்ல
வருடங்கள் நாற்பத்தைந்தானாலும்
நாம் பதைக்கும் பதைப்பு நீங்காதடா!
கால் கழுவச் சென்ற உன்னைக் காலன் கண்டானா?
எங்கு தான் சென்றனையோ
கூறடா எம் குலக்கொழுந்தே?
உன் ஆத்மா சாந்தியடைய நித்தம் நித்தம்
பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்
பப்பா, அம்மா, சகோதரிகள்,
உற்றார், உறவினர்.

கைதடி-நுணாவில்,
சாவகச்சேரி.

(60569)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
01
—
03
—
1941



உதிர்வு
15
—
11
—
1996

## அமரர் இராசதுரை ஜெயகுணரத்தினம்

சிங்கேற்றின் எழில் நடையாய்! புன்சிரிப்பால்
செங்கமல மலர்வென்ற திருமுகத்தாய்!
பொங்குசினம் என்றும் இன்றிச் சாந்தம் பூத்துப்
பூலோக இந்திரன் போல் பொலிந்திருப்பாய்!
இங்கெவர்க்கும் இல்லாத மதிப்புக் கொண்டாய்!
ஏற்றமுறு நெஞ்சை விட்டு மறைந்தபோதும்!
எங்களது மனதிலே உங்கள் ரூபம்
என்றென்றும் நிலையாகி நிற்கும்.

உங்கள் பிரிவால் துயருறும்

மனைவி சிவபாக்கியம்,
பிள்ளைகள் தர்சினி, சுதர்சன், சிலானி.

கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை.

[606[illegible]]

# இடம்மாற்றம்

நெடுந்தீவு மேற்கு உப-தபாலகம் மக்களின் நன்மை கருதி பிரதான வீதிக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த உப - தபாலகம் ஒதுக்குப்புறமான இடம் ஒன்றில் இதுவரை இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

(உ-3)

DAY CLASS
கணக்கீடு
A/L 99
By. S.D.J. சுதர்ஷன்
Mon. 10. 30— 12. 30
BOSCO
25, றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.
(60679)

# குழந்தையைக் கடத்தி சங்கிலி திருட்டு

வீதியோரம் உள்ள வீட்டுப் படலைக்குள் தனியாகநின்றிருந்த மூன்றுவயதுக் குழந்தை ஒன்றைக் கடத்திச் சென்ற இனந்தெரியாத நபர் குழந்தையின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துக் கொண்டு மீண்டும் சில மணிநேரத்தில் (இரவு 7 மணிக்கு) குழந்தையை அதன் வீட்டுப் படலையில் விட்டுச் சென்றார்.

ஆனைக்கோட்டை கூழாவடிப்பகுதியில் கடந்த மூன்று நாள்களுக்கு முன் இச் சம்பவம்இடம்பெற்றதாகத்தெரியவருகிறது.

மாலை 5 மணிக்குக் காணாமல்போன குழந்தை இரவு 7 மணிக்கு சங்கிலியின்றி வீட்டுப்படலையில் விடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-15-139)

## கலைவிழா

சரசாலை மத்தி அம்பாள் அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் கலைவிழா இன்று பிற்பகல் 12.30 மணி முதல் சரசாலை இராமாவில் பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெறவிருக்கின்றது.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் க. கோபாலகிருஷ்ணர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(உ-3)

## தகர்ப்பு

மட்டக்களப்பு வடக்குப் பகுதிக்கு லக்ஸபானா மின் சாரத்தை விநியோகிக்கும் பாதையில் உள்ள ஐந்து மின் கம்பங்கள் — சித்தாண்டியில் — வியாழனன்று இரவு இனந் தெரியாதவர்களால் தகர்க்கப்பட்டுள்ளன.

# ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்

39, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

**03 - 12 - 1998** இல் நடைபெற உள்ள அகில உலக ஊனமுற்றோர் தினத்தையொட்டி நடத்தப்படும் போட்டிகள் :-

## 01. பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

**தலையங்கங்கள்:**

01. அமுக்க வெடியின் அனர்த்தங்கள்.
02. ஊனமுற்றோரின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்.
03. ஊனமுறுதல் வாழ்வின் முடிவல்ல.

**நிபந்தனைகள்:**

★ **28 - 11 - 98** அன்று 19 வயதிற்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் மாத்திரமே பங்குபற்றலாம்.
★ கட்டுரை மேற்குறிப்பிட்ட ஏதாவது ஒரு தலையங்கத்தில் 400 சொற்களுக்குக் குறையாமலும் 750 சொற்களுக்குக் கூடாமலும் இருக்க வேண்டும்.
★ கட்டுரையை தத்தமது பாடசாலை அதிபரால் உறுதி செய்யப்பட்டு அனுப்பப்பட வேண்டும்.
★ நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

**போட்டி முடிவு திகதி: 28 - 11 - 1998** [ நண்பகல் 12.00 மணி ]

★ முடிவுகள் பத்திரிகையில் வெளியிடப்படும்.
சிறந்த ஆக்கங்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

## 02. வினாவிடைப் போட்டி

வினாக்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றுக்கான பதில்களை A-04 அளவிலான தாளில் தெளிவாக எழுதி அனுப்பவும்.

**வினாக்கொத்து**

01. ஊனமுறுவதற்காகிய முக்கிய காரணங்கள் 3 தருக.
02. யாழ் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் ஆரம்பித்து எத்தனை வருடங்கள் நிறைவு பெற்றுள்ளன?
03. பிரித்தானிய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் விழிப்புலனற்ற மந்திரியின் பெயர் என்ன?
04. அகில உலகிலும் கண்ணிவெடி அனர்த்தங்களை ஒழிக்க வேண்டும் என குரல் கொடுத்த காலஞ்சென்ற பெண்மணி யார்? அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
05. வெள்ளைப்பிரம்பு எந்த ஆண்டில் விழிப்புலனற்றோரின் அடையாளச் சின்னமாக அறிமுகப்படுத்தப்பட்டது.
06. யாழ் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் ஊனமுற்றோர் புனர் வாழ்விற்காக நடத்தும் செயற்பாடுகள் 5 தருக.
07. இன்று உலகத்தில் ஊனமுற்றோர் தொகை எவ்வளவு என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்?
08. ஊனமுற்றோரின் துயர்களைத் துடைப்பதற்கு உமது ஆக்கபூர்வமான 3 ஆலோசனைகளைத் தருக
09. ஓசையின் பரிமாணத்தை அளவிடும் அலகு எது? எத்தனை அலகிற்கு மேல் இருப்பின் மனிதனின் செவிப்புலன் பாதிப்படையும்?
10. எமது பகுதியில் போர் நடைபெற்ற இடங்களுக்கு மீளச் செல்லும் மக்கள் மிதிவெடிகளிலிருந்து தம்மை பாதுகாப்பதற்கு முதலில் அறிய வேண்டியவை எவை?

**போட்டி முடிவு திகதி: 28 - 11 - 1998** ( நண்பகல் 12. 00 மணி)

**நிபந்தனைகள்:**

1. ஊனமுற்றோர் சங்க செயற்குழு அங்கத்தவர், ஊழியர்களையும், அவர்கள் குடும்பத்தவரையும் தவிர்ந்த மற்றோர் யாவரும் பங்கு பற்றலாம்.
2. பதில்கள் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.
3. பதில் எழுதும் பொழுது கீழ்க்கண்ட விவரங்களைத் தரவும். உங்கள் முழுப் பெயர், விலாசம், [illegible], பால்,
4. நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது.

கட்டுரைக்கான ஆக்கங்களையும் வினாவிடைக்கான விடைகளையும் அனுப்ப வேண்டிய முகவரி:

செயலாளர்,
**ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்,**
39, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி. யாழ்ப்பாணம்.

(சி/5490)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1, 500 தொலைபேசி இணைப்புகள்

# அடுத்த ஆண்டில் கிடைக்கும்

யாழ்ப்பாணம், நவ. 15

அடுத்த வருடம் யாழ். மாவட்டத்தில் ஆயிரத்து 500 புதிய தொலைபேசி இணைப்புகள் வழங்குவதற்கான அடிப்படைக் கட்டமைப்பு வேலைகள் நடைபெற்று வருவதாக ரெலிக்கொம் நிறுவன பிரதேச முகாமையாளர் த. பாலசுப்பிரமணியம் உதயனுக்குத் தெரிவித்தார்.

புதிய தொலைபேசி இணைப்புகள் தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

அரச அலுவலகங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் அரச திணைக்களகங்களுக்கு புதிய இணைப்புகள் வழங்கப்படும் போது முன்னுரிமை வழங்கப்படும்.

தற்பொழுது யாழ். பரிவர்த்தனை நிலையம் ஊடாக 550 இணைப்புகளும், பருத்தித்துறை பரிவாத்தனை நிலையம் ஊடாக 52 இணைப்புகளும், மோட்டாரோலா ஊடாக 106 இணைப்புகளும் யாழ். மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் மற்றும் தனியார் தொலைத் தொடர்பு நிறுவனங்கள் தமது அழைப்புக்களைப் பெறுவதற்கு தினமும் மாலை 5 மணிமுதல் அடுத்த நாள் காலை 8 மணி வரை தொலைபேசியை பயன்படுத்தினால் மார்க்க நெருக்கடியைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்கும் இடையே பாவனையிலிருக்கும் மார்க்கங்களின் எண்ணிக்கை பாவனையாளர்களுக்கு போதிய அளவு இல்லாத காரணத்தினால் தான் தொலைபேசி அழைப்புக்களை உடனடியாகப் பெறமுடியாது உள்ளது. இதனைத்தவிர்ப்பதற்கு மேற்கண்ட வகையில் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

யாழ். பண்ணையிலுள்ள தொலைத் தொடர்பு நிலைய வளவில் 160 மீற்றர் உயர தொலைத்தொடர்புகோபுரம் அமைப்பதற்கான அத்திவாரக் கட்டுமாணப் பணிகள் முடிவடையும் நிலையில் இருக்கின்றன — இப்படி அவர் மேலும் கூறினார். (உ-5)

## மாணவியை பாம்பு கடித்தது

நெல்லியடி, நவ. 15

வடமராட்சியில் பாடசாலை மாணவி ஒருவர் பாம்பினால் கடியுண்டு மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சக்கோட்டை றோமன் கத்தோலிக்க பாடசாலை மாணவியான மரியராஜா புஸ்பலீலா (வயது 16) என்பவரே பாம்பினால் கடியுண்டார்.

பாடசாலையில் இருந்து வீடு திரும்பியபின் முகம் கழுவுவதற்காக அவர் கிணற்றடிக்குச் சென்ற சமயம் பாம்பு கடித்தது. (இ-109-9)

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் எட்டாவது ஆண்டு நிறைவு விழா இன்று காலை 10. 30 மணியளவில் இணைய அலுவலகத்தில் பேராசிரியர் வீ. கே. சணேசலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்த விழாவில் இணையத்தின் கடந்த கால செயற்பாடுகள் தொடர்பாகவும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளது. (இ-5)

## கைதானோரில் ஒருவர் விடுதலை

யாழ்ப்பாணம், நவ 15

சுன்னாகத்தில் படையினர் கைதுசெய்த இரு இளைஞர்களில் ஒருவர் விடுதலைசெய்யப்பட்டார்.

சடந்த 12 ஆம் திகதி கைது செய்யப்பட்ட சூராவத்தையைச்சேர்ந்த தேவராஜ் சர்மிளராஜ் (வயது 20) என்ற இளைஞர் தொடர்ந்துதடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகிறார்.

இவருடன் கைதுசெய்யப்பட்ட ஏழாலை தெற்கைச் சேர்ந்த சுந்தரலிங்கம் ராஜ்குமார் (வயது 27) எனபவரே விடுவிக்கப்பட்டவர் ஆவார். (இ-5)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம் நவ. 15

மட்டுவில் ஆ. நடராசா எழுதிய ''மூவர் தமிழ்'' எனும் நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மட்டுவில் வடக்கு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

இந்தநிகழ்வில் சாவகச்சேரி இந்து ... பிரதேச செயலர் ... கொள்வார். (இ-ரி)


## மாபெரும் இசை நிகழ்ச்சி

### இன்று மாலை

உங்கள் ஆவலைப் பூர்த்திசெய்யப் போகிறீர்கள்!

நுணாவில் மத்தி

அருள்மிகு கந்தசுவாமி (வைரவர்) ஆலய நிதியுதவிக்காக

யாழ். குடாநாட்டின் அன்றைய

'கண்ணன்' 'ராஜன்ஸ' 'ரங்கன்' 'அருணா'

இசைக்குழுக்களின் கலைஞர்களும்

இன்றைய

'ராகம்ஸ்' 'சாரங்கா'

'ஆனந்' 'இளையநிலா'

இசைக்குழுக்களின் கலைஞர்களும் ஒன்றிணைந்து ஒரே மேடையில் வழங்கும்

திரை இசை நிகழ்ச்சி

### இசை அலைகள்

இடம்: சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபம்

காலம்: 15 - 11 - 1998 ஞாயிற்றுக்கிழமை மாலை 1-30 முதல் 4-30 வரை

விழா அமைப்பாளர்கள்

விளம்பர அன்பளிப்பு:

வீடியோ, ஓடியோ றெக்கோடிங் செய்வதில் முன்னோடிகள்

வீடியோப் படப்பிடிப்பாளர்

### மேகராஸ் வீடியோ

தலைமையகம்:

38, குகன் வீதி,

அரியாலை, யாழ்ப்பாணம்.

கிளை நிலையம்:

இல. 494, கண்டி வீதி,

தபாற்கட்டைச் சந்தி,

அரியாலை.

(60688)


## 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 27 | 15 |
| 06 | 11 |
| 1956 | 1979 |

செல்வி

### கமலாசனி விநாயகமூர்த்தி

(பூமா)

(B.A. — சமூக விஞ்ஞானம், பல்கலைக்கழகம், பேராதனை)

எங்கள் சிரேஷ்ட அன்புக் குலமகளை நிதமும் மனதால் நினைவுகூரும் நாம் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்பு அப்பா, அம்மா,
சகோதரி, சகோதரர்களும்,
மற்றும் அன்புள்ளங்களும்,

கரவெட்டி. (60681)


## விக்னா கல்வி நிறுவனம்

### கணக்கீடு

திரு. பாலவாசன்

### A/L 98 DAY CLASS

Mon. - Fri. 10 - 12 Tue. - Thu. 8 - 10

ஆரம்பம்:- 16 - 11 - 98 Mon. 8 - 10

அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

(60699)


## மரண அறிவித்தல்கள்

### குமாரசாமி ஐயர் தங்கம்மா

கரம்பன் வட்டுவில் முருகமூர்த்தி ஆலய சிவாச்சாரியார் காலஞ்சென்ற குமாரசாமி ஐயரின் மனைவி தங்கம்மா நேற்று (14 - 11 - 98) சனிக்கிழமை காலமானார்.

இவர் சாந்தி, ஈஸ்வரி, கலைச்செல்வி (ஆசிரியை, கரம்பன் சண்முகநாத ம. வி.) ஆகியோரின் அன்புத் தாயாரும், ம. ஜெயராம சர்மா (ஆசிரிய ஆலோசகர், கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்), க. கேசவசர்மா (சிவாச்சாரியார், நொய்யாத்தோட்டம் பிள்ளையார் கோயில்), சோ. கேதீஸ்வரசர்மா (சிவாச்சாரியார், கற்பகப் பிள்ளையார் கோயில் நல்லூர் தெற்கு – கச்சேரி கிழக்கு ஞானவைரவர் கோயில்) ஆகியோரின் மாமியாரும், ஜெ. ஜானகி (ஸ்ரீ லங்கா ரெலிகொம்), ஜே. ஷோபனா (ஆசிரியர், கரம்பன் சிறியபுஷ்ப ம. ம. வி.), ஜெ. ஜனனி, கே. சாரங்கி, கே. பிரியங்கி ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-11-98) ஞாயிற்றுக்கிழமை இல. 4, கற்பக விநாயகர் வீதி, கச்கேரி - நல்லூர் வீதியில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக் புதிய நேரம் 2.00 மணிக்கு செம்மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல. 4, கற்பகவிநாயகர் வீதி,
கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(6070)

திருமதி

### பொற்கொடிப்பிள்ளை அரசரத்தினம்

சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி பொற்கொடிப்பிள்ளை அரசரத்தினம் 14-11-98 இல் வவுனியாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற குமரேசு அரசரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற பூபாலசிங்கம், அமிர்தலிங்கம் (கனடா), யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெகசோதி, கைலைநாயகி (கனடா), பராபரசிங்கம் (முகாமைத்துவப்பணிப்பாளர்—இ. போ. ச., வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 61, சிவன் கோயில் றோட், தோணிக்கல், வவுனியாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
சி. நவரத்தினம் (G. S.)
(மருமகன்)

சித்தன்கேணி. (60698)

### இராமநாதன் மகேந்திரநாதன்

(பொறியியலாளர், சிக்காகோ - அமெரிக்கா)

வீமன்காமம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சுளிபுரம் மத்தியை வாழ்க்கைத் துணைவியின் இடமாகக் கொண்டவருமான இ. மகேந்திரநாதன் 13-11-1998 அன்று சிக்காகோவில் காலமானார்.

அன்னார் இராமநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர், மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை), பரமஸ்வரி இராமநாதன் தம்பதிகளின் அன்பு மகனும், சுளிபுரம் வயிரமுத்து வடிவேல் (வடிவேல் அன் சன்ஸ், நவீன சந்தை யாழ்ப்பாணம் - வடிவேல் எண்டர்பிறைசஸ்- நுவரெலியா), சின்னம்மா – வடிவேல் தம்பதிகளின் அன்பு மருமகனும், மன்மதகுமாரியின் அன்புக் கணவனும், கம்சானந்தி, நிமலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், டாக்டர் இளங்கோ (அமெரிக்கா), ரவீந்திரநாதன் (மருந்தாளர் அமெரிக்கா), டாக்டர் நரேந்திரநாதன் (ஆஸ்திரேலியா), கஜேந்திரநாதன் (அமெரிக்கா), சுபத்திரா விஜயலட்சுமி, முருகேந்திரன் (நோர்வே), சுசிலா ஸ்ரீலக்சுமி (கொழும்பு), சுகுணா வரதலட்சுமி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி ஜெயக்குமாரி செல்வரட்ணம் (நுவரெலியா), திருமதி வசந்தகுமாரி-கோணேசநாதன் (நீராவியடி-யாழ்ப்பாணம்), வ. வசந்தகுமார் (நுவரெலியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 16-11-98 திங்கட்கிழமை சிக்காகோவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
து. கோணேசநாதன்
(சகலன்)

90/4, நீராவியடி
பிள்ளையார் கோவில் தெற்கு வீதி,
யாழ்ப்பாணம்.

(60705)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரூபவாஹினியில் இன்று

ரூபாவாஹினியில் ஒளிபரப்பாகும் கேள்வியால் ஒரு வேள்வி நிகழ்ச்சியில் இன்று பிற்பகல் ஒருமணிக்கு துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் சமகாலப் பிரச்சினைகள் தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிக்கவுள்ளார்.


எமது நேற்றைய
CD வெளியீடு!

பிரபு – தேவயானி
நடித்த
என் உயிர் நீதானே
(பிரமிட் CD வெளியீடு)

முரளி - கௌசல்யா
நடித்த
உன்னுடன்
(பிரமிட் CD வெளியீடு)

சுப்பஸோ
198 / 5, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/5533)

சிவா திரை
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

பிரபு – தேவயானி
கவுண்டமணி, செந்தில்
நடித்த
என் உயிர் நீதானே

காட்சி:
10-30., 2-30 மணி.
[சி[5534]


## 'டெக்' திருடியவர் வசமாகச் சிக்கினார்

யாழ்ப்பாணம், நவ. 15

பருத்தித்துறையில் கடந்த வாரம் சினிமாத் திரை அரங்கு ஒன்றில் இருந்து வீடியோ டெக் ஒன்றைத் திருடியதாகக் கூறப்படும் நபர் பிடிபட்டுள்ளார். டெக்கும் மீட்கப்பட்டுள்ளது.

புளொட் அமைப்பின் உதவியுடன் இத்திருட்டு பிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் கடையொன்றில் விற்கப்பட்ட சமயமே பொருளும், ஆளும் கையும் மெய்யுமாகப் பிடிபட்டதாக தெரிவிக்கப்பட்டது.

24 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த டெக், 7 ஆயிரம் ரூபாவுக்கு விற்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதேபோல இன்னும் ஒரு 'டெக்' இந்தக் கடையில் இருப்பது தெரியவந்துள்ளது.

திருட்டுத் தொடர்பாக பிடிபட்ட நபர் விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (உ-15)


எமது புதிய
CD வெளியீடு!

பிரபு - தேவயானி
கவுண்டமணி - செந்தில்
என் உயிர் நீதானே
(பிரமிட் CD)

அடுத்த வெளியீடு!
உன்னுடன்
(பிரமிட் CD)

வீடியோ
விமல்
யாழ்ப்பாணம்.
(சி/5532)


### செம்மணி......

(முதலாம் பக்கத் தொடர்)

வழங்க வேண்டும் என்றும்—

இத்தகைய முயற்சிகள் நிறைவேறுவதற்கு அரசு உதவ வேண்டும் என்றும்—

தூதுக்குழுவால் வலியுறுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பின் போது வடக்குக்கான போக்குவரத்து, வன்னிக்கான உலர் உணவு நிவாரணம், யுத்தத்தை நிறுத்திப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாகவும் தூதுக்குழுவால் வலியுறுத்தப்பட்டமை தெரிந்ததே. (இ-9)

### திருமலை......

(முதலாம் பக்கத் தொடர்)

டிக்கைக்கும் தாம் பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

### தெல்லிப்பழை...

(முதலாம் பக்கத் தொடர்)

★ கிறகரி அன்ரன் ஜேசுதாஸ் (வயது 24) மத்திய கிழக்கு வீதி, குருநகர்.

★ துரைராசா நிஹால் டன்ஸ்ரன் (வயது 28) மத்தியூஸ் வீதி, சுண்டுக்குளி.

★ நாகன் பாலசிங்கம் (வயது 22) கைதடி வடக்கு.

★ சங்கர்தாஸ் சிறீதரன் (வயது 23) மட்டுவில்வடக்கு

★ குமரேஸ் ஞானேஸ்வரன் (வயது 23) கூழாவடி லேன், ஆனைக்கோட்டை.

★ ஜெகதீஸ் ஜெகபான் வயது 20) இல. 4, ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளி.

★ இராசேந்திரம் மரிஸ்லைன் (22 வயது) நீர்வேலி தெற்கு.

★ ஆறுமுகம் சுந்தரலிங்கம் (வயது 23) சக்தி ஆஸ்பத்திரி, குடாரப்பு, நாகர் கோயில்.

★ மகாரட்ணம்ஜெயசுதன் (வயது 20) சுதுமலை தெற்கு.

★ டேவிட் அன்ரனி (வயது 48) சென். தோமஸ் லேன், பருத்தித்துறை.

★ கணபதிப்பிள்ளை கேதீசன் (வயது 22) தையிட்டி, காங்கேசன்துறை.

★ பிரான்ஸிஸ் றோமன் (வயது 23) இல. 3 மத்திய கிழக்கு வீதி, குருநகர்.

★ இரட்ணம் உதயகுமார் (வயது 22) பழைய பூங்கா வீதி யாழ்ப்பாணம்.

★ செபமாலை விமலகுமார் (வயது 32) செம்பியன்பற்று வடக்கு.

★ செல்லக்கிளி சத்தியசீலன் (வயது 20 ) மாவிலங்கை வீதி, துன்னாலை கிழக்கு.

★ சுப்பிரமணியம் நாகராசா (வயது 21) குப்பிழான் வடக்கு.

★ கிருஸ்னசாமி குகதாசன் (வயது19) மிருசுவில் வடக்கு. (இ-5-6)

### அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்)

விக்கின்றன.

தென் ஆபிரிக்காவில் வெள்ளையர் ஆட்சி இருந்த காலத்திலேயே விடுதலைப்புலிகளுக்கும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸுக்கும் நெருங்கிய உறவு இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தென் ஆபிரிக்காவில் விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம்கள் இயங்குவது குறித்து அங்குள்ள பத்திரிகைகள், சஞ்சிகைகள் சமீபகாலமாக செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

ஜனாதிபதி நெல்சன் மண்டேலா விடுதலைப்புலிகளுக்கு [illegible] வழங்குவதாக இலங்கை அரசு சந்தேகிக்கின்றது. (இ)

## ஈ.பி.டி.பி. கண்டனம்

யாழ்ப்பாணம், நவ. 15

தமிழ் மக்கள் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள் என்று எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தை மறுத்து நாட்டின் பொறுப்பு வாய்ந்த ஜனாதிபதி தெரிவித்த கருத்தை ஈ.பி.டி.பி. வன்மையாகக் கண்டிக்கின்றது.

தென் ஆபிரிக்க தொலைக்காட்சி ஒன்றுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்திருந்த கருத்துகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஈ.பி.டி.பி. வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

அணிசேரா மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தென்ஆபிரிக்கா சென்றிருந்த ஜனாதிபதி அங்கு தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இலங்கையில் தனிநாடு கோரும் சிறுபான்மை சமூகம் நாட்டின் பூர்வீகக் குடிகள் அல்லர் எனத் தெரிவித்தகருத்து தமிழ் மக்களின் மனங்களை மிகவும் புண்படுத்தியிருக்கின்றது.

கடந்த காலத்தில் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரைகளில் தமிழ் மக்கள் போராடுவதற்கு நியாயமான காரணங்கள் இருக்கின்றன. சிங்கள மக்களுக்கு இருக்கின்ற சகல உரிமைகளும் இந்த நாட்டில் வாழும் சகல தமிழ் மக்களுக்கும் இருக்க வேண்டும். என பகிரங்கமாக கருத்துத் தெரிவித்திருந்தார்.

ஆனால் இன்று தமிழ் மக்களின் மனங்களைப் புண்படுத்தும் கருத்துக்களைதெரிவித்திருப்பது அதிர்ச்சியாக இருக்கும் அதேவேளையில் இனப்பிரச்சினைக்கு தீர்வை எதிர் பார்த்திருக்கும் தமிழ் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

தென் ஆபிரிக்க தொலைக்காட்சிக்கு ஜனாதிபதி தெரிவித்த கருத்துத் தொடர்பாகத் தமிழ் மக்களுக்கு தெளிவான விளக்கம் கொடுக்குமாறு ஈ.பி.டி.பி. வேண்டுகோள் விடுக்கின்றது.

இப்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## கோப்பாய் லயன்ஸ் கழக வைபவம்

யாழ்ப்பாணம், நவ. 15

கோப்பாய் லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவ பரிசோதனையும், கண்பரிசோதனையும், கண்ணாடி வழங்கல் வைபவமும், திருமணப்பதிவும் இன்று ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மேற்படி கழக அலுவலகத்தில் நடைபெறவுள்ளன.

பிராந்திய தலைவர் லயன் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தத்தின் கோப்பாய் லயன்ஸ் கழகத்துக்கான உத்தியோகபூர்வ விஜயத்தையொட்டியே மேற்படி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

## தீவுப்பகுதிக்கு தொலைபேசி

யாழ்ப்பாணம், நவ. 15

தீவுப்பகுதிக்கு முதன் முதலாக மூன்று தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்ட போதிலும் தீவுப்பகுதியில் ஒரு தொலைபேசி கூட வழங்கப்படவில்லை என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அப்பகுதி மக்களால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அப்பகுதியில் இருந்து மக்கள் தொலைபேசி மூலம் தமது உறவினர்களுடன் தொடர்பு கொள்வதற்காக யாழ்ப்பாணம் வரவேண்டிய ஒரு நிலையில் இருந்தனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது:

இதன் அடிப்படையில் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியில் நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய மூன்று இடங்களில் தலா ஒரு மோட்டோறோலா தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-9)


புலமைப் பரிசில் பரீட்சை-10

முதல் 5 இடங்களைப் பெற்றோர்

| | |
|---|---|
| க. அச்சுதன் — | பரி. யோவான் கல்லூரி |
| பா. கஜானன் — | பரி. யோவான் கல்லூரி |
| த. சித்தார்த்தன் — | மகாஜனாக் கல்லூரி |
| க. கோபிகிருஷ்ணா — | யாழ். மத்திய கல்லூரி |
| நி. சிந்துஷா — | ஆனந்த வித்தியாலயம் |

அடுத்த பரீட்சை 15-11-1998 பிற்பகல் 2-00 மணி வினாத்தாள் தேவையானவர்கள் முன்கூட்டியே பதிவு செய்து சிரமத்தைத் தவிர்க்கவும்.

சிவநெறி கல்வி நிலையம்
(ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அண்மையில்)
- நிர்வாகி
(சி/5529)

'கல்யாணி'
நூல் வெளியீட்டு விழா
(நாடக அரங்கியலுக்கானது)

காலம்:- 1998 - 11 - 15 ஞாயிற்றுக்கிழமை
காலை 10.00 மணி (புதிய நேரம்)
இடம்:- யா/ இராமநாதன் கல்லூரி
மருதனார்மடம்
தலைவர்:- பண்டிதர் ம. ந. கடம்பேசுவரன்

ஆசியுரை, வாழ்த்துரை, வெளியீட்டுரை, மதிப்பீட்டுரைகளுடன் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அவைக்காற்றுகைக் குழு,
சுன்னாகம்.

விழா சிறப்புற வாழ்த்துவோர்:-
கணேசன் ஸ்ரோர்ஸ்
(பட்டுச்சோலை)
கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(60690)


## புதிய ஆளுநர்...

(முதலாம் பக்கத் தொடர்)

கடந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில்—1987 ஆம் ஆண்டு — இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான காலகட்டத்தில் மாகாண சபை நிர்வாக அலகு நடைமுறைப்படுத்தப்பட்டது

அந்தக் காலகட்டத்தின் போது வடக்கு — கிழக்கு மாகாண சபையின் முதலாவது ஆளுநராக ஜெனரல் நளின் செனவிரட்ன பதவி ஏற்றார்.

அப்போது வடக்கு—கிழக்கு மாகாண சபையில் பங்கு பற்றிய தமிழ்க் கட்சிகளும், அக்கட்சிகளுக்கு ஆதரவாக இருந்த மூத்த தமிழ்க் கட்சியும் அன்றைய இராணுவ அதிகாரியாக இருந்து ஆளுநராகப் பதவி ஏற்ற ஜெனரல் நளின் செனவிரட்னவை வாழ்த்தி வரவேற்றன.

அவருடன் இணைந்து விருந்துபசாரங்களில் கலந்து கொண்டு, ஆளுநரைப் பிரதம விருந்தினராகவும் கௌரவித்து, அவர் முன்னிலையில் தேசியக்கொடியை ஏற்றிக் கரகோசம் செய்தனர். இப்படியானவர்களின் கண்களுக்கு மேஜர் ஜெனரல் நளின் செனிவிரட்ன இராணுவ அதிகாரியாகப் புலப்படவில்லையா?

ஆளுநராக எவர் நியமிக்கப்பட்டாலும் தமது பதவியின் வரையறைக்குள் அவர் செயற்படாது தான்தோன்றித் தனமாகச் செயற்பட்டால் நாம் நிச்சயம் மக்கள் பலத்துடன் அவரை எதிர்ப்போம்.

மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனா கடந்த காலங்களில் வடக்கு கிழக்குப் பகுதியில் கடமையாற்றியுள்ளதால் வடக்கு — கிழக்கு மக்களின் பிரச்சினைகளை—மன உணர்வுகளை — நன்குணர்ந்திருப்பார் என்ற வகையில் நாம் அவரை வாழ்த்தி வரவேற்கின்றோம். அதே சமயம் புதிய ஆளுநர் தமது சேவைக் காலப் பகுதியில் எமது மக்களின் நியாய பூர்வமான பிரச்சினைகளை, தேவைகளை நன்கு அறிந்து சேவையாற்ற வேண்டும் என்றும் —

எமது மக்களின் உற்ற நண்பராகவும், சகோதரராகவும் தமிழ் மக்களின் இன்ப துன்பங்களிலும், நன்மை தீமைகளிலும் அவர் கலந்து கொண்டு செயற்பட வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றோம். என்றுள்ளது, (இ)

## கொக்காவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்)

சென்று புதுக்குடியிருப்பில் வசித்து வந்த சாம்பசிவம் அருட்செல்வன் (வயது 25)—

மோட்டார் சைக்கிளில் அவருடன் சென்ற கிளிநொச்சி மருத நகரைச் சேர்ந்த இராசு லட்சுமி ( வயது 75 ) ஆகியோரே உயிரிழந்தவர்கள் ஆவர்.

யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து சென்று பாண்டியன் குளத்தில் வசித்துவந்த முத்தையா ரமணிதரன் (வயது 28) என்பவர் காயமடைந்தார். (இ-9-164)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15-11-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org